https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

09th JULY 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 35





## மைத்திரி-சந்திரிகா மீண்டும் இணைவு:

# திரைமறைவில் நடவடிக்கை

வீழ்ந்து கிடக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை கட்டி எழுப்புவதற்கு சந்திரிகா மீண்டும் கட்சியில் இணைய வேண்டும் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் கருதுவதால் அதற்கான நகர்வில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்று அறிய முடிகிறது.

முதலில் சந்திரிக்காவுக்கும் மைத்திரிக்கும் இடையில் இருக்கின்ற மனக்கசப்பை நீக்க வேண்டும்.அது நடந்தால்தான் சந்திரிக்காவை மீண்டும் கட்சியில் இணைப்பது சாத்தியம்.

02 ➤

## கவலையில் உள்ள மொட்டு எம்பிக்களின் குடும்பங்களுக்கு சிறப்பு சலுகைகள்

அமைச்சுப் பதவிகள் கிடைக்காததால் அதிருப்தி அடைந்திருக்கும் மொட்டு கட்சி எம்பிக்களின் குடும்பங்களுக்கு அமைச்சுப் பதவிகளைத் தவிர்த்து வேறு பல சலுகைகளை வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அரச தகவல்கள்

02 ➤



## இனி அமைச்சு பதவிகள் இல்லை

இனி எவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்குவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முடிவெடுத்துள்ளார் என்று அரச உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் ஜனாதிபதியாக பதவியேற்றதில் இருந்து


02 ➤

## மாகாண அமைச்சுக்களின் அதிகாரங்கள் எம்பிக்களிடம்

மாகாண சபைகள் இயங்காமல் இருப்பதால் அந்த மாகாண சபைகளுக்குரிய அமைச்சுக்களின் அதிகாரங்களை அந்தந்த மாகாணங்களின் எம்பிக்களுக்கு வழங்குவதற்கு அரசு யோசித்து வருகிறது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

2017 இல் இருந்து மாகாண சபைகள் இயங்காமல் உள்ளன.இதனால் அந்த மாகாணங்களின் அபிவிருத்தியில்

02 ➤






புதுச்சுடர்
www.puthusudar.lk
2023 JULY 09 - SUNDAY

# எல்லாம் அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக...

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவியை ஏற்று மிக வேகமாக ஒரு வருடமாகிவிட்டது.இன்னும் எஞ்சி இருப்பது இன்னும் ஒரு வருடம்தான்.

அடுத்த வருடம் செப்டம்பர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும்.அந்தத் தேர்தலில் மக்கள் ஆணைமூலம் தான் ஜனாதிபதியாக வேண்டும் என்பதுதான் ரணிலின் இப்போதைய இலக்கு.

எஞ்சி இருப்பது ஒரு வருடம் என்றாலும் கண்ணை மூடித் திறப்பதற்குள் காலம் ஓடிவிடும்.இப்போது இருந்தே தேர்தலுக்கான ஏற்பாடுகளை செய்தாக வேண்டும்-பிரசார பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அதை ரணில் கச்சிதமாகச் செய்து வருவதை அவதானிக்க முடிகிறது.ஆனால்,எல்லாம் நியாயமானமுறையில் இடம்பெறுகிறதா என்று பார்த்தால் அப்படி இல்லை.

மக்கள் இன்னும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி இருக்க அவர்களின் பிரச்சினைகளை முற்றாகத் தீர்ப்பதை விட்டுவிட்டு குறுக்கு வழியில் சென்று மக்களை ஏமாற்றி வாக்குகளை அபகரிக்கும் நடவடிக்கையில்தான் அரசு ஈடுபட்டு வருகிறது.

மக்களை கவருவதற்காக-அவர்களின் வாக்குகளை அள்ளுவதற்காகக் கொண்டுவரப்பட்டதுதான் அஸ்வெசும என்ற நிவாரணத் திட்டம்.அது இப்போது தலைகீழாக மாறியுள்ளது.

உண்மையான ஏழைகள் புறக்கணிக்கப்பட்டு வசதி படைத்தவர்களுக்கு உதவி வழங்கும் திட்டமாக அது மாறியுள்ளது.

இதனால் மக்கள் நாடுபூராகவும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.இதை-இந்தப் போராட்டத்தை மிக சாதாரணமாகக் கருத முடியாது.அது ஆட்சியை கவிழ்க்கும் அளவுக்கு ஆபத்தாக அமையும்.எதிர்வருகின்ற தேர்தலில் அவர்கள் அரசுக்கு எதிராகவே நிற்பார்கள்.அவர்களின் வாக்கு பலமானது.

அதுபோக,இருக்கின்ற எம்பிக்களையும் வளைத்துப் போட்டு வாக்குகளை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

அந்த வகையில்,அமைச்சுப் பதவிகள் மறுக்கப்பட்டுள்ள எம்பிக்களின் குடும்பங்களுக்கு சலுகைகளை வழங்கி அவர்ளையும் தன்னகத்தே வைத்துக்கொள்ளும் திட்டம் ஒன்று ஜனாதிபதியிடம் உள்ளது.

அதேபோல்.செயலிழந்து போய் கிடக்கும் மாகாண சபைகளின் அதிகாரங்களை எம்பிக்களிடம் கொடுத்து அவர்களையும் கைக்குள் போடுவதற்குத திட்டமிட்டுள்ளார்.

மாகாண சபைகளின் அமைச்சுக்களின் அதிகாரங்களை அந்தந்த மாகாணங்களின் எம்பிக்களுக்கு பகிர்ந்து கொடுத்து அவர்களை வளைக்கப்போகிறார்.

மேலும்,கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை தேர்தலே இல்லாமல் மீண்டும் உறுப்பினர்களாக்குவதற்கான யோசனை ஒன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு வழிகளின் ஊடாக தனது வாக்கு வங்கியை அதிகரிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

ஆனால்,யார் வாக்களித்தால் அவர் வெல்லுவாரோ அவர்களை வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவில்லை.

எரிபொருள் வரிசையும் நீங்கி மின் வெட்டும் நின்றால் எல்லாப் பிரச்சினையும் சரி என்பதுபோல் ஜனாதிபதி நினைக்கிறார்.

மின்சாரம் இருப்பதைவிட அது வெட்டப்படுவதே மேல் என்பதுபோல் இருக்கிறது நிலைமை. ஏனென்றால்,அப்படி வருகிறது மின்கட்டணம்.

வருமானமே இல்லாத வீடுகளுக்கு 5 ஆயிரம்,10 ஆயிரம் என்று வருகிறது பில்.வாழ்நாளில் அனுபவிக்காத துன்பம் இது.

கோத்தாவின் ஆட்சியில் மின் துண்டிப்பு மாத்திரம்தான் இருந்தது.இப்படி மின் கட்டணம் அதிகரிக்கவில்லை.அரசு எல்லா பிரச்சினையும் தீர்ந்துகொண்டு வருவதாக எண்ணி ஒரு மாய உலகில் வாழ்ந்து வருகிறது.

அடிமட்ட மக்களின் நிலைமை மிக மோசம்.நினைத்துப் பார்க்க முடியாத அளவு துன்பத்துகிறார்கள்.பொருட்கள் தாராளமாகக் கிடைக்கலாம் அதை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை.அந்தளவு விலை அதிகரிப்பு.

இப்படி மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்க ,அதை ஆராய்ந்து பார்க்காமல்-அதற்குத் தீர்வை முன்வைக்காமல் தேர்தலை மாத்திரம் குறிவைத்து காய் நகர்த்திக்கொண்டு வருகிறது அரசு.



## பாடசாலை கீதப்போட்டியில் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் ,களுவாஞ்சிக்குடி முதலிடம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு வலயத்திற்குட்பட்ட 1AB பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பாடசாலை கீதப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

வெற்றிபெற்ற மாணவர்களையும் மாணவர்களை வழிப்படுத்திய திருமதி. ரவித சசிகுமார் ,திருமதி.சந்திரலதா மதியழகன் ஆகிய ஆசிரியைகளையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.சபேஸ்குமார் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் , உதவிகரமாக அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

### இனி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இதனால் இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கட்சி வட்டாரம் தெரிவிக்கிறது.

மைத்திரியை 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்தவுக்கு எதிராக இறக்கி மைத்திரியை ஜனாதிபதியாக்கியதில் பெரும் பங்கு உண்டு சந்திரிக்காவுக்கு.

2017 இல் மைத்திரி மஹிந்தவை பிரதமராக்கியதில் இருந்து சந்திரிக்காவுக்கு மைத்திரியுடன் மனக்கசப்பு ஏற்பட்டது.

2019 ஜனாதிபதி தேர்தலில் கோத்தாவுக்கு ஆதரவு வழங்குவதற்கு சுதந்திர கட்சி முடிவெடுத்ததால் அந்த மனக் கசப்பு மேலும் வலுவடைந்தது.மைத்திரியை வெளிப்படையாகவே விமர்சிக்கத் தொடங்கினார் சந்திரிகா.

இருந்தும்,சுதந்திர கட்சி வீழ்ந்துவிட்டது.அதைக் கட்டி எழுப்புவதென்றால் சந்திரிக்கா கட்சியில் இருக்க வேண்டும் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் இப்போது கருதுவதால் அவரை இணைப்பதற்கான நடவடிக்கையில் அவர்கள் இறங்கியுள்ளனர்.


### கவலையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கின்றன.

அமைச்சுக்களின் இணைப்புச் செயலாளர்கள் பதவிகள்,வாகனங்கள் உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

அமைச்சுப் பதவிகள் கிடைக்காத அதிருப்தியில் அவர்கள் அரசுக்கு எதிராக செயற்படாமல் இருப்பதற்காகவே இந்த ஏற்பாடலாம்.




### இனி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இன்றுவரை அதாவது, ஒரு வருடமாக 10 கெபினட் அமைச்சுப் பதவிகளை கேட்டு போராடி வருகிறது மொட்டு கட்சி.

அந்த 10 பேரின் பெயர்களை அப்போதே பசில் ராஜபக்ஸ ஜனாதிபதியிடம் வழங்கி இருந்தார்.அந்த 10 பேர்களில் சிலருக்கு மக்களின் எதிர்ப்புகள் இருக்கின்றன என்று கூறி அவர் அமைச்சுப் பதவிகளை வழங்க மறுத்துவிட்டார்.

மக்கள் எதிர்ப்புள்ளவர்களுக்கு பதிலாக வேறு உறுப்பினர்களுக்கு பதவிகளை வழங்குமாறு மஹிந்த அப்போது கூறி இருந்தார். ஆனால்,எதுவும் நடக்கவில்லை.

நாடாளுமன்றில் முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான தேவை ஏற்படுகின்றபோதெல்லாம் அமைச்சுப் பதவிகள் இதோ தருகிறேன்,அதோ தருகிறேன் என்று கூறி அவர்களிடம் இருந்து வாக்குகளை மாத்திரம் பெற்றுக்கொண்டார் ஜனாதிபதி.

இவ்வாறு பல தடவைகள் அவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் அரசுடன் இணையவுள்ளதால் அவர்களுக்கு வழங்குவதற்காகவே ஜனாதிபதி இவ்வாறு இழுத்தடிக்கிறார் என்றும் அப்போது சொல்லப்பட்டது.

இருந்தும்,இனி எவருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதில்லை என்றும் அதற்கான தேவை இல்லை என்றும் ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார் என அரச தகவல்கள் கூறுகின்றன.

### மாகாண...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பின்னடைவு ஏற்பட்டுள்ளது எனக் கருதும் அரசு அதை நிவர்த்தி செய்வதற்காகவே இந்த ஏற்பாட்டைச் செய்வதாகக் கூறப்படுகிறது.



SDAIA
الهيئة السعودية للبيانات والذكاء الاصطناعي
Saudi Data & AI Authority



# சவுதி அரேபியா முதல் இடம்

(காலித் ரிஸ்வான்)

சமீபத்தில் வெளியிடப்பட்ட செயற்கை நுண்ணறிவு அறிக்கையின் ”அரசாங்க மூலோபாயம்” பிரிவில் சவூதி அரேபியா உலகளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

ஜேர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்றுள்ளன. இது உலகின் 60 க்கும் மேற்பட்ட நாடுகளை மதிப்பிட்டு பெறப்பட்ட அறிக்கையாகும் என சவூதி பிரஸ் ஏஜென்சி தெரிவித்துள்ளது.

உலக செயற்கை நுண்ணறிவுச் சுட்டி என்பது ஐக்கிய இராச்சியத்தினை தளமாகக் கொண்ட செய்தி வலையமைப்பான டோர்டொய்ஸ் மீடியாவால் (Tortoise Media) வெளியிடப்படும் செயற்கை நுண்ணறிவின் சர்வதேச வகைப்பாட்டின் சுட்டிகளில் ஒன்றாகும். இது 100க்கும் மேற்பட்ட சுட்டிகளை உள்ளடக்கியுள்ளது. இவை பின்வரும் ஏழு பிரதான வகைப்படுத்தலின் கீழ் அடங்கும். அரச மூலோபாயம், ஆராய்ச்சி, மேம்பாடு, திறன், உள்கட்டமைப்பு, இயக்க சூழல் மற்றும் வணிகம்.



செயற்கை நுண்ணறிவுடன் கூடிய முன்முயற்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு, செயற்கை நுண்ணறிவுக்கான தேசிய இலக்குகளை உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல், யுஐ துறையை வளர்க்கும் நோக்கில் எடுக்கப்படும் வேலைத்திட்டங்களில் அரசாங்க நிறுவனங்களது அதீத ஈடுபாடு, தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான தேசிய வியூகத்தை நிறுவுதல் போன்றன அரசு மூலோபாய பிரிவில் சவூதி அரேபியா 100 சதவீதமான மதிப்பெண்களைப் பெற காரணமாக அமைந்துள்ளன.

செயற்கை நுண்ணறிவின் உருவாக்கி நிலைபெறச் செய்வதற்கான உறுதியான அர்ப்பணிப்பை சவூதி அரேபியா ஆரம்ப காலத்திலிருந்தே வழங்கி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் 1979 ஆம் ஆண்டில், சவூதி அரேபிய தரவு மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையத்தை (SDAIA), AI தொடர்பான அனைத்து அமைப்புகளையும், அதன் வளர்ச்சியையும் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளை மேற்பார்வையிடும் பொறுப்பான மைய அதிகாரியாக நிறுவ அரச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

SDAIA இன் இயக்குநர்கள் குழுவின் தலைவரான பட்டத்து இளவரசர் மற்றும் பிரதமர் முஹம்மத் பின் சல்மானின் தூர நோக்கங்களையும், இராச்சியத்தின் விஷன் 2030 இன் நோக்கங்களையும் அடைய தரவு மற்றும் செயற்கை நுண்ணறிவுக்கான தேசியத் திட்டங்களை SDAIA சிறப்பாக வழிநடாத்தியது.

சவூதியின் இந்த சாதனை விஷன் 2030 இன் இலக்குகளுடன் ஒன்றித்துப் பயணிக்கிறது, இது பல்வேறு தளங்களில் உலகளாவிய குறிகாட்டிகளில் சவூதி அரேபியாவானது முக்கிய இடத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# 21 இல் ரணில்-மோடி சந்திப்பு

நீண்ட முயற்சியின் பின் எதிர்வரும் 21ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இந்திய பிரதமர் மோடிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

சரியாக ரணில் ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருட நிறைவிலேயே இந்தச் சந்திப்பு இந்தியாவில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஜனாதிபதி ஒருவர் புதிதாகப் பதவியேற்றால் அவர் மேற்கொள்ளும் முதல் உத்தியோகபூர்வ வெளிநாட்டு பயணம் இந்தியாவுக்கு என்பதே சம்பிரதாயமாக இருந்து வருகிறது.

ஆனால், ரணில் ஜனாதிபதியாகி ஒரு வருடமாகியும் அது நடக்கவில்லை.ஒரு வருடமாக அவர் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தார் ரணில்.

அந்த முயற்சி இப்போதுதான் சாத்தியமாகியுள்ளது.

# வைத்தியசாலைகளில் மின் துண்டிப்பு

வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார அமைச்சுக்கு சொந்தமான நிறுவனங்களில் மின் கட்டணங்கள் செலுத்தப்படாமல் உள்ளதால் அங்கு மின்சாரம் துண்டிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

சுமார் 400 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் 300 கோடி ரூபா மின் கட்டணம் செலுத்தப்பட வேண்டியுள்ளது என்று மின்சார சபை மேலும் கூறியுள்ளது.

மருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பணம் இல்லாமல் சுகாதார அமைச்சு தடுமாறிக்கொண்டிருக்கும் நிலையில்தான் மின்சார சபை இந்தக் குண்டைத் தூக்கிப் போட்டுள்ளது.

# மேலும் பல வரிகள் விரைவில்...

அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்காக மேலும் பல புதிய வரிகளை அறிமுகப்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று அரச தகவல்கள் கூறுகின்றன.

அந்த வகையில் காணி வரி உள்ளிட்ட மூன்று வரிகள் முதல் கட்டமாக கொண்டுவரப்படவுள்ளன என மேலும் கூறுகின்றன அந்தத் தகவல்கள்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாக பல வரிகள் ஏற்கனவே கொண்டுவரப்பட்டு நடைமுறையில் உள்ளன.

இப்போது கொண்டுவரப்படவுள்ள வரிகளும் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைவாகவே ஆகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த வரிச் சுமையைத் தாங்க முடியாமல் மக்கள் துன்பத்துகின்றனர்.ஊதிய வரி காரணமாக பல வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.இதனால் வைத்தியத் துறை தடுமாறுகிறது.



# வெற்றியாளர்களுக்கு வெகுமதிகள்

Nations TrustBank

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் ‘கொடுக்கல் வாங்கலுக்கு அப்பாற்பட்ட ஓர் உறவு’ திட்டத்தினூடாக இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் பணத்தை பெற்றுக் கொண்ட, நாடளாவிய ரீதியில் காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு ஏப்ரல் மாதத்துக்கான நேஷன்ஸ் ரெமிட்டன்ஸ் வெகுமதிகளை வழங்கியிருந்தது.

நாட்டுக்கு அந்நியச் செலாவணி வருகையை அதிகரிக்கச் செய்வதற்கான வங்கியின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையிலும், இலங்கையர்கள் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் அவர்களின் அன்புக்குரியவர்களுக்கிடையிலான பிணைப்புகளை மேம்படுத்திடும் வகையிலும், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியினால், நேஷன்ஸ் ரெமிட்டன்ஸ் வாடிக்கை யாளர்களுக்கு அன்பளிப்பு வவுச்சர்கள் வழங்கப்படுகின்றது.

‘கொடுக்கல் வாங்கலுக்கு அப்பாற்பட்ட ஓர் உறவு’ எனும் தொனிப் பொருளின் கீழ் வங்கியினால் துரித வெளிநாட்டு பண அனுப்புகை சேவை வழங்கப்படுவதுடன், தங்கியிருக்கும் மற்றும் வினைத்திறனான பண அனுப்பல் கட்டமைப்பும் வழங்கப்படுகின்றது.

இந்த வவுச்சர்களை வெற்றியீட்டுவதற்கு தகைமை பெற, Nations Remittance Clhf &. 50,000/- அல்லது அதற்கு நிகரான வெளிநாட்டு பண அனுப்புகைகளை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு, சுப்பர் மார்கெட் அன்பளிப்பு வவுச்சர்களை வெல்வதற்கான வெற்றியாளர் தெரிவுக்கான வாய்ப்பை சுயமாக பெற்றிருந்தனர். வங்கியின் இந்தத் திட்டத்தில் நாடளாவிய ரீதியிலிருந்து பெறுமளவானோர் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர் 08





# பிரபாவின் இறுதி நிமிடம்...!!



ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்

# வீழ்கிறது புலிகளின் இறுதி பாதுகாப்பு அரண்:

## நீருக்குள் இறங்கி கைப்பற்றிய படையினர்

அத்தோடு முடிகிறது 59 ஆவது படையணியின் நகர்வு...

மறுபுறம்...

ஏனைய படையணிகளின் நகர்வு.

53 ஆவது ,57 ஆவது ,58 ஆவது போன்ற அணிகள்.

53 ஆவது படையணி நகர்ந்துகொண்டிருக்கும்போது...

ஓரிடத்தில் உயரமான பாதுகாப்பு அணை.10 அடி உயரம்.

புலிகளின் இறுதி பாதுகாப்பு அரண் அது.பலமான அரண்.

அதற்கு முன் நீர்.5 அடி ஆழத்தில்....

மழை பெய்து ஓய்ந்த நேரம் அது.

அந்த அணையைக் கைப்பற்ற வேண்டும்.அப்போதுதான் முழு நந்திக்கடல் பகுதியையும் பிடிக்க முடியும்.இல்லாவிட்டால் அந்த இடத்தோடு முடிவுக்கு வரும் எல்லாம்..

எப்படியாவது பிடித்தாக வேண்டும்.

நீருக்குள் நீந்திச் சென்றுதான் கைப்பற்ற வேண்டும்.ஆனால்,புலிகள் கடும் அலெர்ட் அந்த அணையில்...

பகலில் முடியாது.புலிகள் இலகுவாகத் தாக்குவார்கள்.

மேலிருந்து பார்த்துகொன்டு இருக்கிறார்கள் புலிகள்.

நீருக்குள் சிக்கிவிடுவார்கள் படையினர்.. மறைவதற்கு இடமும் இல்லை.

இரவுதான் பொருத்தமான நேரம்.அதுவும் இரவில் நீருக்குள் நின்று சண்டையிட முடியாது.

இரவில் நீரை கடந்து அணையை நெருங்கி பிறகு தாக்குதல் நடத்துதல் இதுதான் பிளான்.

“இரவு 11 மணிக்கே தாக்குதலைத் தொடங்குங்கள்.“

உத்தரவிடுகிறார் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன.

இல்லை... அந்த நேரம் பொருத்தமற்றது...

இரவு 2 மணிக்கே நீருக்குள் இறங்க வேண்டும். எப்படியும் 4 மணிக்கு நீரைக் கடந்துவிடலாம்.அப்போது விடிந்துவிடும். தாக்குதல் நடத்தலாம் இலகுவாக.

மாற்று யோசனையை முன்வைக்கிறார் மேஜர் அனுருத்த ரத்நாயக்க.

அதை ஏற்கிறார் கமால்...

“சரி...அப்படியே நடக்கட்டும்...“

தலை அசைக்கிறார்...

திட்டமிட்டபடியே ஒபரேஷன் ஆரம்பம்.

இறங்குகிறார்கள் உள்ளே...நீருக்கு உள்ளே...

மூக்கு மட்டும் மேலே...தலைக்கு மேலே துப்பாக்கி.

நகருகிறார்கள் மெல்ல..மெல்ல..சத்தம் எழாதவாறு...

மேலே புலிகள். பங்கர்களுக்குள்...

தெளிவாகத் தெரிகிறது படையினருக்கு...

படையினரைக் காணவில்லை புலிகள்.

கரை ஏறுகிறார்கள் இப்போது.காலை 4.40 இற்கு.

பிறகு என்ன..!!!

தொடங்குகிறது சண்டை.

அசரவில்லை புலிகள்.வைத்துப் பிடிக்கிறார்கள்.

கடுமையாகப் போராடுகிறார்கள் படையினர்.

ஆர்ட்டிலேறி... கவச வாகனங்கள்... விமானத் தாக்குதல்கள் ..எல்லாம் படையினரின் உதவிக்கு...

பெரும் போராட்டம்...

இறுதியில் கைப்பற்றுகிறார்கள் புலிகளின் இரண்டு பங்கர்களை...

இருந்தும் ஒரு சிக்கல்...

பங்கர்களை சுற்றி கண்ணி வெடிகள்.

சிக்குகிறார்கள் படையினர் அதற்குள்...

பறக்கின்றன கால்கள்.

இதனால் பங்கரை விட்டு வெளியேற முடியவில்லை படையினரால்...அதற்கு உள்ளேயே...

“வெளியேற வேண்டாம்..உள்ளேயே இருங்கள்...“

உத்தரவிடுகிறார் மேஜர் அனுருத்த ரத்நாயக்க.

இராணுவ பொறியியலாளர்கள்.இப்போது களத்தில்...

அகற்றுகிறார்கள் ஒவ்வொரு கண்ணி வெடியாக. மெல்ல மெல்ல...

அதன் பின்தான் அங்கிருந்து நகருகிறார்கள் அடுத்த பங்கருக்கு...

வைத்துப் பிடிக்கிறார்கள்.

கைப்பற்றுகிறார்கள் ஒவ்வொரு பங்கராக..

பின்வாங்குகிறார்கள் புலிகள்.

விடியும் நேரம் ...

எல்லா பங்கர்களும் படையினர் வசம்.

கடும் சேதம் படையினருக்கு.

60 பேர் காயம்,

இருந்தாலும் வீழ்ந்துவிட்டன அந்த பங்கர்கள். புலிகளின் இறுதி பாதுகாப்பு அரண்.

அங்கிருந்து ஓடுகிறார்கள் புலிகள் நந்திக்கடல் வாவிக்குள்...

வெறும் ஒரு கிலோ மீற்றர் தூரம்தான் அங்கிருந்து நந்திக்கடலுக்கு...

இப்போது அங்கு வந்து சேருகிறது 58ஆவது படையணி.

ஒன்றுசேருகின்றன இரண்டும். 53 ஆவது படையணியும் 58ஆவது படையணியும்...

புதுத் தெம்பு படையினருக்கு.

பின்வாங்க மறுக்கிறார்கள் காயமடைந்த படையினர்கூட.முன் நகரவே விருப்பம்.

பிரபாவை பிடிக்க வேண்டும் என்ற வெறி அவர்களுக்கு...

இருந்தும், உடனே நகரவில்லை.

ஓய்வு.இரண்டு நாட்கள் ஓய்வு.

ஆடிப் பாடி–சந்தோசமாக

அதன் பின்தான் அடுத்த அக்ஸன்.

அங்கிருந்து நகர்கிறது படை இப்போது போர் நிறுத்த வலயத்துக்குள்..

அங்கும் கடும் சண்டை.

கொஞ்சம்கூட தலை தூக்க முடியாது. குனிந்த நிலையிலேயே நகர்வு.

வந்துகொண்டிருக்கிறார்கள் மக்கள். படையினர் பக்கம்.வாவி ஊடாக...

டியூப்களை – கலன்களை பயன்படுத்தி...

இருந்தும், நிறுத்தவில்லை புலிகள் சுடுவதை...

(தொடரும்....!!! )



**இறங்குகிறார்கள் உள்ளே...**
**நீருக்கு உள்ளே...**
**மூக்கு மட்டும் மேலே...தலைக்கு மேலே துப்பாக்கி.**
**நகருகிறார்கள் மெல்ல... மெல்ல... சத்தம் எழாதவாறு...**
**மேலே புலிகள். பங்கர்களுக்குள்...**
**தெளிவாகத் தெரிகிறது படையினருக்கு...**
**படையினரைக் காணவில்லை புலிகள்.**
**கரை ஏறுகிறார்கள் இப்போது. காலை 4.40 இற்கு.**







- **தேசிய கடன்களை மறுசீரமைப்பு செய்யுமாறு கூறியது யார் ?**
- **இதனால் வங்கி கட்டமைப்புக்கும் வங்கி வாழிக்கையாளர்களுக்கும் ஏற்படப்போகும் ஆபத்து என்ன?**
- **தேசிய கடன் மறுசீரமைப்பு மூலம் ஏதோவொரு வகையில் மக்களுக்கு நன்மை கிடைப்பதற்கு வாய்ப்புகள் உண்டா?**
- **2048இல் நாட்டை அபிவிருத்தி செய்யப்போவதாக ஜனாதிபதி கூறுவதுபற்றி ?**
- **அஸ்வெசும... என்ன நடந்தது?**
- **நாட்டில் துப்பாக்கிச் சூடுகள் – கொலைகள் அதிகரித்துள்ளன.இதற்கு கரணம் என்ன?**

# அரசு ஜனாதிபதித் தேர்தலுக்கு அவசப்படுவது ஏன்?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் உதய கம்மன்பில எம்பி. அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : தேசிய கடன்களை மறுசீரமைப்பு செய்யுமாறு கூறியது யார்?**

பதில் : தேசிய கடன்களை மறுசீரமைப்பு செய்யுமாறு சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் எங்குமே சொல்லப்படவில்லை.அரசுதான் தேசிய கடன் மறுசீரமைப்புக்கு முயற்சி செய்கிறது.

ஆனால், தேசிய கடனை மறுசீரமைப்பு செய்யாமல் சர்வதேச கடன்களை மறுசீரமைப்பு செய்ய முற்பட்டால் அதற்கு இணங்கமாட்டோம் என்று சர்வதேச கடன் வழங்குநர்கள் கூறியதாக அறிய முடிகிறது.

அரசு கடன் பெற்றிருப்பது EPF ,அரச வங்கிகள் போன்ற அரசுக்கு சொந்தமான நிறுவனங்களிடம் இருந்துதான்.தேசிய கடன் மறுசீரமைப்பு செய்தால் வங்கிகளில் பண கொடுக்கல் – வாங்கலில் பாதிப்பு ஏற்படும்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக தொழில் நிறுவனங்களுக்கு வங்கிகள் கடன் வழங்க வேண்டும்.அந்த வங்கிகளின் பணத்தைக் கொடுக்காமல் அரசு இப்படி மறுசீரமைப்பு செய்தால் அந்த வங்கிகள் தொழில்சாலைகளுக்கு கடன் வழங்காது.

அப்படியென்றால் எப்படி பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவது?

இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக கடந்த வருடம் ஏப்ரல் மாதம் இலங்கை அரசு அறிவித்து சர்வதேச கடன்களை செலுத்துவதில் இருந்து தவிர்ந்து கொண்டது.ஆனால்,தேசிய கடன் செலுத்தலில் இருந்து விடுபடவில்லை. அரசுக்குத் தேவை என்றால் தேவையான அளவுக்கு ஏற்ப பணத்தை அச்சடிக்க முடியும்.

இதுவரைக்கும் பணத்தை அச்சடித்து கடன்களை செலுத்திக்கொண்டே வருகிறோம்.நாம் டொலரில்தான் வங்குரோத்து அடைந்துள்ளோம்.ரூபாவில் அல்ல.

நாம் வங்கிகளில் கடன்களை வாங்கிவிட்டு வாங்கிய முழுத் தொகையையும் தரமாட்டோம். அரைவாசிதான் தருவேன் என்று கூறுவது சரியா?

அரசு கடன்களை செலுத்தாமல் இருப்பதற்காக நாடாளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுப்பது அரச பயங்கரவாதமாகும்.

**கேள்வி : இதனால் வங்கி கட்டமைப்புக்கும் வங்கி வாடிக்கையாளர்களுக்கும் ஏற்படப்போகும் ஆபத்து என்ன?**

பதில் : வங்கிகளில் இருந்து அதிக கடனை பெறுவது அரசுதான்.மக்கள் வைக்கும் நிலையான வைப்பில் இருந்துதான் இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடத்தில் திரும்பிச் செலுத்த வேண்டிய கடனை மறுசீரமைப்பு மூலம் 10 வருடங்களில்தான் செலுத்துவோம் என்று அரசு சொன்னால், வாடிக்கையாளர் வைப்பிலிட்ட தொகையை மீளப்பெற வந்தால் அவர்களுக்கு வழங்குவதற்கு வங்கிகளிடம் பணம் இல்லாமல் போகும்.

இது வங்கி கட்டமைப்பைப் பாதிக்கும். அரசின் இந்த செயற்பாட்டுக்கு நாம் கடுமையான எதிர்ப்பை வெளியிடுகிறோம்.

**கேள்வி : தேசிய கடன் மறுசீரமைப்பு மூலம் ஏதோவொரு வகையில் மக்களுக்கு நன்மை கிடைப்பதற்கு வாய்ப்புகள் உண்டா?**

பதில் : ஒருபோதும் இல்லை.

**கேள்வி : 2048இல் நாட்டை அபிவிருத்தி செய்யப்போவதாக ஜனாதிபதி கூறுவதுபற்றி ?**

பதில் : 2148 இல் ஜனாதிபதிக்கு 99 வயதாகும்.1992இல் அவர் தொழில் அமைச்சர்.அப்போது சொன்னார் 2000 ஆகும்போது இலங்கை முழுமையான தொழில்சாலை நாடாக மாறும் என்று.

அப்படி நடந்ததா? அப்படி நடந்திருந்தால் நாம் இன்னும் இறக்குமதியில் தங்கி இருக்கமாட்டோம்.ஏற்றுமதியில் கொடி கட்டிப் பறந்துகொண்டிருப்போம்.

2001 இல் கூறினார் 100 நாட்களில் புதிய நாடு உருவாகும் என்று.அதுவும் நடக்கவில்லை.

2001 பெப்ரவரி மாதம் முதலாம் திகதி புலிகளுடன் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றைச் செய்தார். அப்போது சொன்னார் இன்றிலிருந்து நிலையான சமாதான உருவாகும் என்று.

அதுவும் நடக்கவில்லை.

2015இல் அதிகாரத்துக்கு வந்து சொன்னார் 2030இல் நாடு அபிவிருத்தி அடையும் என்று. பிறகு 2016 இல் வேறு ஒரு வேலைத்திட்டத்தை முன்வைத்தார்.2017 இல் இன்னொன்று.2018 வேறு ஒன்று.

அதன் பின் அவருக்கு முடியவில்லை. ஆட்சி கவிழ்ந்துவிட்டது.

அவர் இதுவரை கூறி வந்த எதையும் நிறைவேற்ற முடியவில்லை.

ஆகவே, அதுபோல்தான் 2048 என்ற கதையும்.இப்போது நாடு போற போக்கைப் பார்த்தால் 2048 இல் நாடு அபிவிருத்தி என்பது கனவிலும் நடக்காது.

**கேள்வி : ஜனாதிபதி தேர்தலை அரசு முன்கூட்டி நடத்துவதற்கு முயற்சி செய்றதா?**

> **அரசியல் வாதிகளினதும் பொலிஸாரினதும் ஆதரவு இல்லாமல் ஒருபோதும் போதைப் பொருள் வர்த்தகம் செய்யவோ பாதாள குழுக்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கவோ முடியாது என்பது சர்வதேசமே ஏற்றுக்கொண்ட உண்மை.**

பதில் : ஆம்.அப்படியான ஓர் ஏற்பாடு உண்டு.

2024 செப்டம்பரில் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டி நடத்துவதற்கு அரசு முயற்சி செய்கிறது. காரணம்,அரசு கூறுகின்ற பொய்கள் எல்லாம் பொய் என்று மக்கள் உணரும் முன்பே தேர்தலை நடத்த வேண்டும்.இல்லாவிட்டதால் வெல்ல முடியாது.

அதுதான் கரணம்.

**கேள்வி : அஸ்வெசும...என்ன நடந்தது?**

பதில் : அரசு பெரும் மோசடி ஒன்றைச் செய்துள்ளது.தகுதி உள்ளவர்களின் பெயர்களை வெட்டிவிட்டு தகுதியற்றவர்களின் பெயர்களை சேர்த்துள்ளது.இது பெரும் மோசடி.

இது பெரும் மக்கள் போராட்டமாக வெடிக்கும்.கோல்பேஸ் போராட்டடத்தை விடவும் பெரிய போராட்டமாக மாறும்.

யாரும் பின்னால் இருந்து இவர்களை தள்ள வேண்டிய தேவை இல்லை.இப்போதே நாடு பூராகவும் பிரதேச செயலகத்தை சுற்றி ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

இது பசியோடு தொடர்புபட்ட பிரச்சினை. தாய்மார்கள் கைக்குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு–வெயிலில்–அழுது அழுது ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

இது வேறு போராட்டம்போல் பாட்டுப் பாடி டான்ஸ் ஆடும் போராட்டம் அல்ல.வன்முறைக்கே இட்டுச் செல்லும் ஆர்ப்பாட்டம்.

உளரீதியாக மக்கள் கோபத்தில் உள்ளனர்.வேதனையில் உள்ளார்கள்.இந்த வேதனைக்கு அரசு மருந்து போடாவிட்டால் அரசின் முடிவுக்கு இந்தப் போராட்டம்தான் காரணமாக அமையும்.

ஐந்து குழந்தைகள் உள்ள–தொழில் எதுவும் இல்லாத–பெற்றோர்கள் சுகவீனமாகவுள்ள குடும்பத்துக்கு அஸ்வெசும இல்லை.மாடி வீட்டில் இருப்பவர்களுக்கு அஸ்வெசும உண்டு என்றால் அதற்கு எதிராக மக்கள் கோபப்படுவது நியாயமில்லையா?

குழந்தைகள் சாப்பாடு இல்லாமல் அழும்போது தாய்,தந்தையருக்கு செய்ய வழி இல்லை என்பதை அரசியல்வாதிகள் உணர வேண்டும்.

**கேள்வி : நாட்டில் துப்பாக்கிச் சூடுகள்–கொலைகள் அதிகரித்துள்ளன.இதற்கு கரணம் என்ன?**

பதில் : உயர் பொலிஸ் அதிகாரியுடன் இதுபற்றிப் பேசினேன்.கடந்த வருடம் நாட்டில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட போராட்டங்களை கட்டுப்படுத்துவதிலேயே பொலிஸார் நிறுத்தப்பட்டனர்.

இதனால் பாதாள குழுவினரின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை சேகரிக்க முடியாமல் போனது.இதனால் அவர்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

இப்போது நாட்டில் அந்த ஆர்ப்பாட்டங்கள் போன்ற நிலைமை இல்லை.இதனால் பாதாள குழுக்களை அடக்குவதற்காக செயற்பாடுகளில் இறங்கியுள்ளோம் என்று அந்த அதிகாரி கூறினார்.

அரசியல்வாதிகளினதும் பொலிஸாரினதும் ஆதரவு இல்லாமல் ஒருபோதும் போதைப்பொருள் வர்த்தகம் செய்யவோ பாதாள குழுக்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கவோ முடியாது என்பது சர்வதேசமே ஏற்றுக்கொண்ட உண்மை.

அதேபோல்,எமது நாட்டில் பாதாள செயற்பாடுகள் இடப்பெறுகின்றன என்றால் அதற்கு நிச்சயம் அரசியல்வாதிகளின் உதவி இருந்தே தீரும் – என்றார்.

***

# அனுரவுக்காக 700 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து...

மெல்போன் நகரத்தில் இடம்பெற்ற கூட்டம் நிறைவுற்றதும் அனுரவுடன் சேர்ந்து செல்பி எடுப்பதற்காக மக்கள் முட்டி மோதினர்.

ஒரு கட்டத்தில் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதும் அவுஸ்திரேலிய பொலிஸார் தலையிட்டு அனுரவை பாதுகாப்பாக வெளியேற்றினர்.

இதைவிட அதிசயம் என்னவென்றால் இந்த கூட்டங்களில் கலந்துகொள்வதற்காக சுமார் 700 கிலோ மீற்றர் தொலைவில் இருந்து மக்கள் மெல்போன் நகருக்கு வந்தமைதான்.

அவர்கள் மெல்போன் நகரக் கூட்டத்தில் மாத்திரமல்ல.ஏனைய இடங்களில் இடம்பெற்ற எல்லா கூட்டங்களிலும் கலந்துகொண்டனர்.

# அவுத்திரேலியாவில் அனுரவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி



கடந்த மாதம் அவுஸ்திரேலியாவின் பல இடங்களில் ஜேவிபி கூட்டங்களை நடத்தியது.

மெல்பேன் நகரில் நடந்த கூட்டத்துக்கு எதிர்பார்த்திராத அளவு மக்கள் வந்தனர்.

கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மண்டபத்தில் 1500 பேர் மாத்திரம்தான் அமரலாம்.

ஆனால்,மக்கள் அதைவிட அதிகமாக வந்ததால் ஒரே நேரத்தில் இரண்டு மண்டபங்களை புக் செய்ய வேண்டிய நிலைக்கு ஏற்பாட்டாளர்கள் தள்ளப்பட்டார்கள்.

அதன்படியே செய்தனர்.

ஒரு மண்டபத்தில் அனுர உரையாற்ற அடுத்த மண்டபத்தில் டிஜிட்டல் திரையை வைத்து அதன்மூலம் அனுரவின் உரையை மக்கள் செவிமடுத்தனர்.

இந்த சனத் திரளை பார்த்து மெய் சிலிர்த்துப் போனாராம் அனுர.

அப்போ...அடுத்த ஜனாதிபதில் தேர்தல ல வாய்ப்பு இருக்கு போல என....




# இந்த அவமானம் தேவையா?

மஹிந்த-ஷிரந்தி திருமண ஆண்டு நிகழ்வு ஒன்று அண்மையில் விஜேராம மாவத்தையில் உள்ள மஹிந்தவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

நீண்ட நாட்களுக்கு பிறகு ராஜபக்ஸ குடும்பம் ஒன்றுகூடும் சந்தர்ப்பம் ஒன்று அவர்களுக்குக் கிடைத்தது.


இருந்தாலும்,பசில் ராஜபக்ஸ வை அங்கு காணமுடியவில்லை. கோத்தாபய மனைவி இல்லாமல் தனியே சென்றிருந்தார்.

மிக நீண்ட நாட்களுக்கு பிறகு கோத்தா அங்கு சென்றமை குறிப்பிடத்தக்கது.ஆனால்,அவருக்கு முன்புபோல் ராஜமரியாதை எல்லாம் கிடையாது.

சிலர் அவரைக் கண்டதும் முகத்தைத் திருப்பிக்கொண்டு சென்றுவிட்டனர்.

இதனால்தானோ என்னவே வெகு விரைவாக அவர் அந்த நிகழ்வில் இருந்து வெளியேறிவிட்டார்.

தேவையா இந்த அவமானம்.



# உலகம் சுற்றும் சந்திரிகா

அரசியலில் ஓய்வு பெற்ற பின் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அந்த ஓய்வைக் கழிப்பார்கள்.

சிலர் சமூக சேவைகளில் ஈடுபடுவார்கள்,சிலர் திரைமறைவில் இருந்து அரசியல் செய்வார்கள்.

ஆனால்,முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் எப்படி அந்த ஓய்வைக் கழிக்கிறார் தெரியுமா?

தனது பிள்ளைகளுடன்-பேரப்பிள்ளைகளுடன் ஒவ்வொரு நாட்டுக்கும் சுற்றுலா சென்று பொழுதைக் கழிக்கிறார்.

அண்மையில் அவர் எகிப்திற்குச் சென்றிருக்கிறார்.

மொட்டு கட்சியின் எம்பிக்கள் சிலர் கடந்த வாரம் நாடாளுமன்றில் அரட்டை அடித்துக்கொண்டிருந்தபோது அவர்களின் மெய்ன் டொபிக்கே இதுதான்.

உண்மையில் சந்திரிக்கா மேடம் போலத்தான் ஓய்வைக் கழிக்க வேண்டும் என்று பேசிக்கொண்டார்கள்.



# கேக் பெட்டியுடன் சென்ற ஜனாதிபதி

கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தை நிறைவு செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேராகச் சென்றது அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டத்துக்கு.

அவர் வெறும் கையுடன் செல்லவில்லை.கேக் பெட்டி ஒன்றுடன் சென்றார்.

அறைக்குள் நுழைந்ததும் அங்கிருந்த எம்பிக்கள் எழுந்து ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும்போது ““ ஆ...இந்தா உங்களுக்கு பரிசு கொண்டு வந்திருக்கேன் ...““ என்றார் ஜனாதிபதி.

அது என்னவென்று தெரியாமல் முழுசினார்கள் எம்பிக்கள்.

“இதோ..சஷேந்திர ராஜபக்ஸ...அவருக்கு இண்டைக்கு பெர்த் டே ...“ என்றார் ஜனாதிபதி.

அப்போதுதான் அதிகமானவர்களுக்குத் தெரியும் அவருக்கு அன்று பிறந்த நாள் என்று.எல்லோரும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

சஷேந்திரவை அழைத்து கேக் வெட்டச் சொன்னார் ஜனாதிபதி.அவரும் மகிழ்ச்சியோடும்-அதிர்ச்சியோடும் சென்று கேக்கை வெட்டினார்.



# கிரிக்கட்டே விளையாடி இருக்கலாம்



ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட எம்பி ஹர்சன ராஜகருணா ஒரு சிறந்த கிரிக்கட் வீரர்.

அதிலும் அவர் சிறந்த பந்து வீச்சாளர்.அவர் படித்த கொழும்பு ரோயல் கல்லூரி கழகத்தின் ஓப்பனிங் ப்வளராக இருந்து கலக்கியவர்.

அந்த சுவையான அனுபவங்களை அவரிடம் கேட்டால் அரசியலுக்கு வராமல் கிரிக்கெட்டே விளையாட்டி இருக்கலாம் போல் தோணுகிறது என்கிறார்.

அவ்வளவு மோசமானதாம் இந்த அரசியல்.

# மைத்திரி 15 வயதில் இருந்தே...



சிலருக்கு புத்தகம் என்றால் உசிரு. அப்படித்தான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும்.

பைபிள் ,கொம்யூனிசம்,மாக்சிவாதம், லெனின் வாதம்,மாவோ இப்படி பல புத்தகங்களை 15 வயதிலேயே படித்து முடித்துவிட்டாராம் அவர்.

அடேங்கப்பா...அப்போ படித்த மேதைதான் இந்த மைத்திரி.

தொடர் - 02



- சின்னத்தம்பி குருபரன் -



# இலங்கையில் சிறுபான்மையினர் புறக்கணிப்புக்களும் சுதந்திர சமத்துவமின்மையும்

## - ஒரு வரலாற்றுப் பார்வை -

1796 – 1948 வரையிலான பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையில் அவர்களின் அதிகாரம், நிர்வாகம், வர்த்தகம் ஆகிய துறைகளை வலுப்படுத்த 1833, 1912, 1920, 1924, 1931 ஆகிய ஆண்டுகளில் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் ஊடாக பிரதேசவாரி, இனவாரி பிரதிநிதித்துவ முறையினை முன்மொழிந்து பிரித்தாழும் தத்துவத்தினுடாக ஆட்சியை நடாத்திச் சென்றனர்.

1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பின் 29 ஆம் சரத்தின் யுஇ டீஇ ஊ பிரிவுகளில் சிறுபான்மையினர் நலன்பேணல், பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமையின் சில பிரிவுகள் சேர்க்கப்படடிருந்தன. இவை பெரும்பான்மையினரின் இனரீதியிலான சில செற்பாடுகளுக்குப் பாதிப்பாக இருந்தமையினால் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பில் திட்டமிட்டு நீக்கப்பட்டன.

1948 – 1972 வரை உள்ள காலப்பகுதியில் இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட சட்டங்களும் திருத்தங்களும் பாரதூ ரமானதாகவும் அமைந்தன. அவை, இனக் கலவரம், வன்முறை, போராட்டங்களையும் தோற்றுவித்துப் பல உயிர், பொருள் சேதங்களையும் ஏற்படுத்தியதோடு தமிழ் மக்களின் வரலாற்றில் மாறாத வடுவினையும் தோற்றுவித்தன.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம், வாகனங்களின் இலக்கத் தகடுகளில் ஆங்கில எழுத்தை நீக்கி ஸ்ரீ எனும் சிங்கள எழுத்தைப் பயன்படுத்துதல் தொடர்பான சட்டமூலம், நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் (கல்லோயா, உடவளவை, மகாவலி நீர்ப்பாசனப் பலநோக்கு அபிவிருத்தித் திட்டம்) திட்டமிட்ட அடிப்படையில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் தேசபிதா டீ.எஸ்.சேனநாயக்கா, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர. ஜெயவர்த்தனா தலைமையில் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை இன்றுவரையும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

பண்டா – செல்வா, டட்லி – செல்வா ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த விடாமல் மேற்கொள்ளப்பட்ட ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டப் பேரணிகள், பாத யாத்திரைகள், ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள், பதாதைகள ஆகியன இனவாதத்தை அப்பட்டமாகத் தூண்டியதோடு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த விடாமலும் தடுத்தன.

இவ்விரு ஒப்பந்தங்களையும் நடைமுறைப்படுத்த விடாமல் தடுப்பதில் தலைமை தாங்கிச் செயற்பட்டவர் முன்னாள் ஜனாதிபதி ஜெ.ஆர் ஜயவர்த்தனா ஆவார்.

இவர் பண்டா – செல்வா ஒப்பந்தத்தைத் தடுப்பதற்காக கண்டியில் இருந்து கொழும்புக்கு பிரபல்யமான மிகப்பெரிய பாதயாத்திரை ஒன்றை நடாத்திச் சென்றார்.

இப்பாத யாத்திரை வரலாற்றில் மிகப் பிரமாண்டமான பாத யாத்திரையாகக் கொள்ளப்படுகிறது.

1948 – 1972 வரை இடைப்பட்ட காலத்தில் தமிழர் என்ற காரணத்திற்காக திரு. கோடீஸ்வரன், திருச்செல்வம் ஆகியோரின் பதவி உயர்வுகள் திட்மிட்டுத் தடுக்கபடபட்டன. இதற்குப் பிரித்தானிய நீதிமன்றம் சோல்பரி யாப்பின் 29 ஆம் சரத்தின் யுஇ டீஇ ஊ பிரிவுகளில் உள்ள விடயங்களைக் குறிப்பிட்டு நீதியான தீர்ப்பு வழங்கி அப்பதவி உயர்வுகளை வழங்குமாறு இலங்கை அரசைப் பணித்ததோடு அதற்கு வியாக்கியாங்களும் கூறியிருந்தது.


இத்தீர்ப்பு இலங்கை அரசுக்குக் கடுப்பையும் இழுக்கையும் ஏற்படுத்தியதாகக் கருதிக் கொண்டனர்.

அதனாலேயே 1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான சுதந்திர முன்னணி அரசாங்கம் பல கட்சிகளை ஒன்றிணைத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் நிரூபித்து சோல்பரி யாப்பினை மாற்றியமைக்கும் பொருட்டு யாப்புச் சீர்திருத்தக் குழுவினை நியமனம் செய்தது.

இந்தியாவில் பறங்கி மலையை ஆட்சி செய்த பாரி மன்னனைக் கொல்வதற்கு அன்றுவரை இணைய முடியாதிருந்த சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களும் ஒன்றுபட்டது போல் சிறுபான்மையினருக்குச் சாதகமான யாப்பினைத் திருத்த வேண்டும் என்பதற்காக மாற்றுக் கருத்துள்ள சிங்கள இடதுசாரிகள் யாவரும் வரலாற்றில் ஒன்று சேர்ந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பாராளுமன்றத்தில் நிரூபித்தனர் என்பது வியப்பாக இருக்கிறது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களால் தயாரிக்கப்பட்ட யாப்பானது இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பு என்ற பெயரில் 25-05-1972 இல் பாராளும்றத்தில் சிபார்சு செய்யப்பட்டு நடைமுறைக்கு வந்தது.









பிரித்தானிய சாம்பிராச்சியத்தின் பிடியில் இருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்காக இன, மொழி, மத, பிரதேச வேறுபாடுகள் இல்லாமல் சகலரும் பிரித்தானிய ஆட்சிக்கெதிராகச் செயற்பட்டனர். சமய மறுமலர்ச்சி இயக்கம், மது ஒழுப்பு இயக்கம், ஆட்சிக்கு எதிரான போராட்டம் எனப் பல வகையிலும் பெரும்பான்மை, சிறுபான்மைத் தலைவர்கள் செயற்பட்டனர்.

1910 ஆம் ஆண்டு குருமக்கலம் யாப்புச் சீர்திருத்தத்தின்படி கல்வி கற்ற இலங்கையர் சார்பில் வாக்குரிமை அடிப்படையில் சேர் பொன் இராமநாதன் மூன்று சமூகங்களினாலும் முதலாவது இலங்கையராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்போது வேறுபாடுகள் இருக்கவில்லை.

போராட்டங்களில் ஈடுபட்ட சிங்களத் தலைவர்களைத் தண்டிப்பதற்கு சந்தர்ப்பம் பார்த்திருந்தார் ஆளுனர் ரொபர்ட் சாமஸ். இந்த வேளையில் 1915 ஆம் ஆண்டு கம்பளைப பிரதேசப் பள்ளிவாசலின் முன்னால் பௌத்த சமய ஊர்வலம் சென்றுகொண்டிருந்தபோது சிங்கள – முஸ்லிம் இனக்கலவரம் ஏற்பட்டது. இதனைத் தமது ஆட்சிக்கு எதிராகச் சிங்களத் தலைவர்கள் மேற்கொண்ட கலவரம் எனக் கருதி அதனை அடக்குவதற்காக ஆளுனர் ரொபர்ட் சாமஸ் “மார்ஷல் லோ“ எனும் யுத்தகாலச் சட்டத்தைப் பிறப்பித்துச் சிங்களத் தலைவர்களான (மது ஒழிப்பு இயக்க) டீ. எஸ் சேனநாயக்கா, எவ். ஆர் சேனநாயக்கா, டீ.பீ. ஜயத்திலகா, எட்மன்ட் ஹேவாவிதாரண, சீ. பட்டுவந்துடாவ, ஏ.ஈ.குணசிங்க ஆகியோரை விசாரணையின்றிச் சிறைப்படுத்தினார். ஆளுனரின் இத்தகைய நடவடிக்கையைத் தமிழ் தலைவர்கள் உட்படச் சகலரும் கண்டித்தனர்.

1914 – 1918 வரை முதலாவது உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்வேளையில் சேர்.பொன்.இராமநாதன் உயிரையும் துச்சமாக மதித்து சிறையில் அடைக்கப்பட்டிருந்த சிங்களத் தலைவர்களை விடுவிப்பதற்காக இரகசியமாகப் பிரித்தானியா சென்று குடியேற்ற நாட்டுக் காரியதரிசியைச் சந்தித்து அவர்களை விடுவிப்பதற்கான கட்டளையோடு நாடு திரும்பினார். இவரைத் துறைமுகத்திலிருந்து வரவேற்று கொழும்பு, கண்டி நகர வீதியெல்லாம் பல்லக்கில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு சென்றனர். இதன் பின்னர் இது போன்ற நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக எல்லோரும் ஐக்கியப்பட வேண்டும் என உணர்ந்து 1919 ஆம் ஆண்டு சேர்.பொன்.அருணாசலம் தலைமையில் இலங்கைத் தேசிய காங்கிரசைத் தோற்றுவித்தனர். சுதந்திர விடுதலைக்காகச் சிங்கள மக்களுடன் கைகோர்த்துச் செயற்பட்ட தலைவர்களாகச் சேர்.பொன்.அருணாசலம், சேர். பொன்.இராமநாதன், டி.பி.ஜாயா. வாப்பச்சி மரைக்காயர் போன்றோர் மதிக்கப்பட்டனர்.

தொடரும்...

# “எதர காசி மெதர வாசி – சீசன் 02” வெற்றியாளர்களை அறிமுகம்




செலான் வங்கி, தனது சுவாரஸ்யமான “எதர காசி மெதர வாசி, சீசன் 02“ குலுக்கலின் முதற்கட்ட வெற்றியாளர்களை அண்மையில் அறிமுகம் செய்தது.

இந்நடவடிக்கை இலங்கைக்கு மிகவும் அவசியமான உள்ளக பணப் பெறல்களை அதிகரிக்கும் முனைப்புடன் ஆரம்பிக்கப்பட்டதோடு, “எதர காசி மெதர வாசி“ ஆனது செலான் ரெமிடென்சஸ் ஊடாக பணம் அனுப்பும், பெறும் எந்த ஒருவருக்கும் ரூ.10 மில்லியன் பெறுமதியான பணப்பரிசுகளை வழங்கக் காத்திருக்கிறது.

குலுக்கலின் 1 ஆம் கட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டபோது, சஞ்சீவ ஜயநாத் (பெறுநர் பிரிவு) மற்றும் சு.று. குசுமலதா (அனுப்புனர் பிரிவு) ஆகியோர் தலா ரூ.250,000 பணப்பரிசுகளை வென்றனர்.

அதேவேளை, பெறுநர் பிரிவின் இரண்டாம் நிலை வெற்றியாளர்களில் ஆ.லோஷன், M.மதுஷங்க, A.R.M. இல்லியாஸ், U.K. கமலேஷ்வரி மற்றும் M.M.S. நஸீஹா ஆகியோரும், அனுப்புனர் பிரிவின் வெற்றியாளர்களில் U.A. பண்டார, தரிந்து முத்துதந்திரிகே, D. அபேசேகர, சரத் ஜயவீர மற்றும் சிவநாதன் முருகேசு ஆகியோரும் உள்ளடங்குவர்.

# Ride for Recycling திட்டம்

Coca-Cola Beverages Sri Lanka Limited (CCBSL) மற்றும் Uber Eats ஆகியன பிளாஸ்டிக் கழிவுகளை பொறுப்புடன் அகற்றுவதற்காக 'Ride for Recycling' என்ற தனித்துவமான வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்மூலம் பொதி விநியோகச் சேவை (Courier Partners) பங்காளிகள் கொழும்பில் உள்ள வீடுகள் மற்றும் உணவகங்களில் இருந்து நேரடியாக PET பிளாஸ்டிக்கை சேகரிக்க முடியும்.

உலக சுற்றுச்சூழல் தினம் 2023 மற்றும் அதன் தொனிப்பொருளான ”பிளாஸ்டிக் மாசுபாட்டிற்கான தீர்வுகள்” என்ற அடிப்படையில் இந்த கூட்டாண்மை மூலம் நாட்டில் பொறுப்பான கழிவுகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இரண்டு முன்னணி நிறுவனங்கள் ஒன்றிணைந்ததன் வெற்றிக்குக் காரணம்.

மேல் மாகாணத்தில் உள்ள Uber Eats சேவை வலையமைப்பைப் பயன்படுத்தி கொழும்பில் உள்ள வீடுகள் மற்றும் உணவகங்களில் இருந்து நேரடியாக PET போத்தல் சேகரிப்புத் திட்டத்தை ஆரம்பிக்க முடியும்.




அதற்காக பொதி விநியோகச் சேவை பங்குதாரர்களின் ஒரு பெரிய வலைப்பின்னல் (Courier Partners) அதற்காகத் திறம்பட ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

இந்த அணுகுமுறை வீட்டுக் கழிவுப் பிரிவினையை நிவர்த்தி செய்ய உதவுகிறது,

# ஜீப் வண்டி பயணம் 2023



The Jeep Club of Sri Lanka (JCSL) ஆனது, மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஜீப் கிளப் எக்ஸ்பெடிஷன் 2023 இனை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

இதற்கு ‘Call of the Wild’ என பெயரிடப்பட்டிருந்தது. மிக ஆர்மான 20 பேர் கொண்ட JCSL உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று, கம்பீரம் கொண்ட யால தேசிய பூங்காவின் பிரமிக்க வைக்கும் நிலப்பகுதிகளில் சென்று, ஆய்வு சுற்றுலாவை மேற்கொண்டனர்.

இதன் முதல் நாளில் யால புளொக் 6 என அறியப்படும் லுணுகம்வெஹெர தேசிய பூங்கா மற்றும் யால புளொக் 5 ஆகிய அழகிய பிரதேசங்களை ஆராய்வதில் கடந்தது. தோடு, இதன் இரண்டாவது நாள், ஜீப் கிளப் எக்ஸ்பெடிஷன் ஆனது, தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் இனப் பல்வகைமையை கொண்ட யால புளொக் 1 இற்குள் கடந்தது.

இங்கு, வனஜீவராசிகள் அதிகாரசபை மற்றும் JCSL இன் சிரேஷ்ட உறுப்பினர்களால் ஜீப் கிளப் உறுப்பினர்களுக்கு, இயற்கைக்கு இடையூறுகளை விளைவிக்காதிருப்பதை உறுதி செய்யும் வகையில், அவர்கள் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவற்றைப் பற்றி கற்றுக் கொடுக்கப்பட்டது.

'Call of the Wild' எனும் இப்பயணம், Jeep 4x4 வாகனங்களின் வரிசையைக் காட்சிப்படுத்தியது. இதில் பிரபலமான Jeep Wrangler, பல்வகை Jeep Grand மற்றும் திறன் கொண்ட Jeep Cherokee ஆகியன உள்ளடங்குகின்றன.

# Riyelta மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான பேட்டரிகள் சிங்கரில்..

நீடித்து உழைக்கும் நுகர்வோர் சாதனங்களின் சில்லறை விற்பனையில், நாட்டில் முன்னணி வகித்து வருகின்ற சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சி, இலங்கையில் Riyelta பேட்டரிகளுக்கான உத்தியோகபூர்வ விநியோகஸ்தராக செயல்படுவதற்காக Leader நிறுவனங்கள் குழுமத்துடன் கைகோர்த்துள்ளது.




அண்மையில் வெளியிடப்பட்ட தயாரிப்பு வரிசையானது மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வாகனங்கள் ஆகிய இரண்டிற்கானவற்றையும் வழங்குகிறது.

அதிநவீன ஜேர்மனிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலங்கையில் தயாரிக்கப்படும் இந்த பேட்டரிகள், இலங்கையில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு ஐரோப்பிய உயர்தர சந்தை பேட்டரிகளை, கட்டுபடியான விலையில் அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குகின்றன.

அத்துடன், பேட்டரிகள் வெகு விரைவில் மோட்டார் கார்களுக்கும் கிடைக்கவுள்ளன. Riyelta உயர் தொழில்நுட்ப பேட்டரிகள், நீண்ட கால உத்தரவாதத்துடன், சிங்கர் ஸ்ரீலங்காவின் ஆதரவுடன், உள்நாட்டு பேட்டரி துறையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

Riyelta உயர் தொழில்நுட்ப பேட்டரிகள் ஒரு தலைசிறந்த பண்புடன் தம்மை ஏனையவற்றிலிருந்து தனித்துவமாக வேறுபடுத்திக் கொள்கின்றன: அதிநவீன SilverCell தொழில்நுட்பத்தின் ஒருங்கிணைப்பு, ஜேர்மனிய விஞ்ஞானிகளின் முன்னோடி தயாரிப்பாக உள்ளன.




# CIPM மாநாடுக்கு SLT-MOBITEL அனுசரணை

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநரான SLT-MOBITEL, 7ஆவது CIPM சர்வதேச ஆய்வு மாநாடு 2023 நிகழ்வுக்கு தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் அனுசரணை வழங்கியிருந்தது.

இந்த ஆண்டின் நிகழ்வு, மெய்நிகர் மற்றும் நேரடி பங்குபற்றலுடன், ஹைபிரிட் நிகழ்வாக நடைபெற்றது. இல. 43, விஜய குமாரதுங்க மாவத்தை, கொழும்பு 5 எனும் முகவரியில் அமைந்துள்ள HR House இலுள்ள CIPM கேட்போர்கூடத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

“எதிர்காலப் பணியை மாற்றியமைப்பது” எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மாநாட்டில், உள்நாட்டையும், சர்வதேச ரீதியிலான நிபுணர்கள், புலமையாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மனித வளங்கள் முகாமைத்துவத்தில் பின்பற்றப்படும் புத்தாக்கமான வழிமுறைகள் மற்றும் உள்ளார்ந்த அம்சங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கான பிரத்தியேகமான கட்டமைப்பாக உள்ளது.

CIPM பட்டதாரிகள் முதல் அரச மற்றும் அரச சாரா பல்கலைக்கழகங்களின் புலமையாளர்கள் அடங்கலாக மனித வளங்கள் நிபுணர்களின் நூறு ஆய்வுப் பத்திரங்களை இந்த மாநாடு பதிவு செய்திருந்தமையால், இந்த மாநாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

# Samsung Electronics இன் புதிய சுற்றுச்சூழல் நடவடிக்கை




Samsung Electronics அண்மையில் தனது புதிய சுற்றுச்சூழல் செயற்பாடு குறித்து அறிவித்துள்ளது. இது காலநிலை மாற்றத்தை சமாளிப்பதற்கான உலகளாவிய முயற்சிகளுடன் இணைவதற்கான ஒரு விரிவான முயற்சியாகும்.

நிறுவன அளவிலான நிகர பூஜ்ஜிய கார்பன் வெளியேற்றத்தை மேற்கொள்வதற்கான உறுதிப்பாடுகள் மற்றும் அதிக புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள், அத்துடன் ஆற்றல் திறன் கொண்ட தயாரிப்புகளை உருவாக்க புதிய தொழில்நுட்பங்களில் முதலீடு செய்து ஆராய்ச்சி செய்தல், நீர் மறுபயன்பாடு மற்றும் கார்பன் பிடிப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

2030 ஆம் ஆண்டுக்குள், Mobile eXperience மற்றும் Visual Display போன்ற வாடிக்கையாளர் மின்னணு வணிகங்களை உள்ளடக்கிய அதன் சாதன அனுபவப் பிரிவில் அனைத்து செயல்பாடுகளுக்கும் நிகர பூஜ்ஜிய கார்பன் வெளியேற்றத்தை அடைவதை நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

Memory, System LSI மற்றும் குழரனெசல வணிகங்களை உள்ளடக்கிய 2050 ஆம் ஆண்டளவில் சாதன தீர்வுகள் பிரிவுக்கு இலக்கு விரிவடைகிறது.

மேலும், Samsung உலகளாவிய முன்முயற்சியான சுநு100 இல் இணைந்துள்ளது, அதன் சர்வதேச சந்தைகளின் மின்சாரத் தேவைகளை ஐந்து ஆண்டுகளுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் பொருத்த உறுதியளிக்கிறது.

# சூரிய சக்தித் துறையில் ஒரு பாரிய புரட்சி



E B Creasy & Co. PLC நிறுவனத்தின் பிரிவான E B Creasy Solar, இலங்கை சூரிய சக்தித் துறையில் ஒரு பாரிய புரட்சியை ஏற்படுத்தி வருகிறது.

146 ஆண்டுகால பாரம்பரியத்தைக் கொண்டுள்ள எமது நிறுவனம், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் நம்பகத்தன்மை, அனுபவம் மற்றும் நிரூபிக்கப்பட்ட சாதனைகள் ஆகியவற்றை கொண்டுள்ளது.

சூரிய சக்தியினை நாம் இன்னும் ஆழமாக ஆராய்ந்து அறிந்துகொள்வோம். அத்தோடு, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த எதிர்காலத்தை நோக்கிய பயணத்தை நு டீ Creasy Solar நிறுவனம் முன்னெடுத்துச் செல்லும் விதம் தொடர்பாகவும் நாம் அறிந்துகொள்வோம்.

1878 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதிலிருந்து E B Creasy & Co. PLC நிறுவனமானது, FMCG, மருந்துகள், சக்தி மற்றும் ஆற்றல், F & B பொழுதுபோக்குகள், மற்றும் வாகனங்கள் போன்ற பல்வேறு தொழில் துறைகளில் துணை நிறுவனங்களை நிறுவி, இன்று ஒரு பெருநிறுவனமாக பரிணமித்துள்ளது.

தொடர்ச்சியான புத்தாக்க முயற்சிகள் காரணமாக நிலைமைகளை சமாளித்து, பிழைத்து, செழித்து, நாடளாவிய ரீதியில் புகழ்பெற்றுள்ள பல வர்த்தக நாமங்களை நாம் உருவாக்கியுள்ளோம்.

ஆரம்ப காலத்திலிருந்தே நாம் பொறுப்பான வணிக நடைமுறைகளை எமது அடிப்படைக்கொள்கையாக பின்பற்றிவந்துள்ளோம். அதே சமயம், நிலைத்தன்மையின் முக்கியத்துவத்தை அறிந்துகொண்ட நாம், பல தசாப்தங்களாக அதற்கும் முக்கியத்துவம் வழங்கி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சூரியசக்தி கலன் தொகுதி வர்த்தகத்தில் முன்னோடிகள் என்ற வகையில், நாடு முழுவதும் சூரிய சக்தியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னின்று செயல்பட்டு வந்துள்ளோம்.

# “மலிபன் யஹறுகுனயே உத்தம பிரணாம“ நிகழ்ச்சி




கடந்த பொசொன் போயா தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் புண்ணிய பூமிக்கு வருகை தந்த பக்தர்களுக்கு பாதுகாப்பு மற்றும் அவர்களுக்குத் தேவையான ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கில் மலிபன் பிஸ்கட் நிறுவனம் அதன் “மலிபன் யஹறுகுனயே உத்தம பிரணாம“ நிகழ்ச்சித் தொடரில் மற்றுமொரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

அனுராதபுரத்தின் ஜய ஸ்ரீ மகா போதி, ருவன்வெலி மகா சேய புண்ணிய தலத்தை மையமாகக்கொண்டு இந்த சிறப்பு “மலிபன் யஹறுகுனயென் உத்தம் பிரணாம“ நிகழ்ச்சிகள் இந்த ஆண்டும் நடைபெற்றன.

இந்நிகழ்வின்போது, புடபங்கள் மற்றும் எட்டு அதமஸ்தான் வேதங்கள் பக்தர்களுக்கு வழங்கப்பட்டதோடு, இங்கு வருகை தரும் பக்தர்களுக்கு மலிபன் பிஸ்கட் தேநீர் தானம் மற்றும் மதிய அன்னதானம் ஆகியவையும், சக்கர நாற்காலி சேவை உட்பட பல திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன.

மலிபன் பிஸ்கட்ஸ் நிறுவனத்தினால் ஒவ்வொரு வருடமும் ஒழுங்கு செய்யப்படும் தேநீர் தான நிகழ்வு இம்முறையும் இடம்பெற்றது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்தலத்தை தரிசிக்க நாடெங்கிலுமிருந்து வருகை தரும் பக்தர்களின் தாகத்தையும் களைப்பையும் தீர்க்கும் நோக்கில் மலிபன் நிறுவனத்தினால் தொடர்ச்சியாக பல வருடங்களாக இத்தேனீர் தான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முதலாவது குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சை நிலையம்



இலங்கையின் முதலாவது குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சை நிலையமான சுவ அரண புற்றுநோயுடன் கூடிய குழந்தை நோயாளிகளுக்காக கதவுகளை அகலத் திறக்கிறது.

இந்த முன்னோடித் திட்டம் சுகமளிப்பதற்கான ஸ்தலமாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டதாகும். இது இலங்கையில் புற்றுநோயுடன் கூடிய குழந்தை நோயாளிகளுக்கு பிள்ளைகளுக்கு உடல்ரீதியான, உணர்வுரீதியான, உளவியல்ரீதியான சிகிச்சைகளை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு, உதவியுடனான பராமரிப்புச் சூழலை முழுமையாகக் கொண்டு வருவதற்குரிய குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சை இடப்பரப்பிற்குரிய தேவையை பூர்த்தி செய்கிறது.

“சுவ அரண“வின் வெளிப்புற, உட்புற கட்டடக் கலை வடிவமைப்பு பாரம்பரியங்களைத் தாண்டிச் சென்று, சுகாதார பராமரிப்பு தொழில்துறை நிபுணர்கள், சிறுவர் நல நிபுணர்கள், குழந்தைநல நிபுணர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன், செயற்றிறனையும், செயற்பாட்டு ஆற்றலையும், எல்லாவற்றிற்கு மேலாக குணப்படுத்தலையும் மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு பெருமை சேர்த்த CDB இன் நதீ பெரேரா



அண்மையில் நடைபெற்ற சிங்கப்பூர் International Masters Athletics Championship 2023 இல் சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB) தனது சிறந்த திறமைகளை வெளிப்படுத்தியிருந்தது. இந்தப் போட்டி அண்மையில் மலேசியாவின் பெருமைக்குரிய மவுன்ட் ஒஸ்டினில் அமைந்துள்ள Stadium Olahraga Perbadanan Johor விளையாட்டுத் தொகுதியில் நடைபெற்றது.

CDB இன் நான்கு பேரைக் கொண்ட அணியினர் ஒன்றுக்கு மேற்பட்ட பதக்கங்களை வென்று, இலங்கையின் கீர்த்தி நாமத்தை உயர்ந்த ஸ்தானத்துக்கு கொண்டு சென்றிருந்தனர். இவர்கள் CDB இல் சிரேஷ்ட பதவி நிலைகளை வகிப்பதுடன், தமக்கு காணப்படும் பொறுப்புகளுக்கு அப்பால் சென்று, இலங்கைக்கு இந்த பெருமையைப் பெற்றுக் கொடுப்பதில் தம்மை அர்ப்பணித்திருந்தமை பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்

சம்பியன்ஷிப் போட்டிகளின் போது இலங்கையின் வீரர்கள் மொத்தமாக 51 பதக்கங்களை வென்றிருந்தனர். மலேசியாவின் (ஜொஹோர்) – Singapore International Masters Athletics Championship 2023 போட்டிகளில் CDB இன் வெற்றிகரமான செயற்பாடுகளில் 35 வயதுக்கு மேற்பட்ட பிரிவில் பதக்கம் வெல்லும் வினைத்திறன்கள் பதிவாகியிருந்தன.

CDB“ இன் நதீ பெரேரா, நான்கு பதக்கங்களை வென்றிருந்தார். இவர் மகளிர் வர்த்தக மெய்வல்லுநர் அணியின் தலைவி என்பதுடன், Singapore international Masters மகளிர் அணியின் தலைவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் வெண்கலப் பதக்கத்தை இவர் வென்றிருந்ததுடன், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல் மற்றும் 100 மீற்றர் தடைதாண்டி ஓடுதல் ஆகியவற்றிலும் வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்திருந்தார்.

# ஆடைத் துறையில் பெண்களின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் GEAR வேலைத்திட்டம்

இலங்கையின் ஆடைத் துறையானது பெண்களை வலுவூட்டுவதில் ஒரு பலம் வாய்ந்த சக்தியாக உருவெடுத்துள்ளதுடன், இத்துறையில் பெண்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு பாராட்டத்தக்கது.

இருப்பினும், பணியாளர்களில் 80% க்கும் அதிகமான பெண்கள் இருந்தாலும், மேற்பார்வை மற்றும் நிர்வாகப் பணிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே உள்ளது. இந்த ஏற்றத்தாழ்வுக்கு தீர்வுகாணும் வகையில், சர்வதேச நிதி நிறுவனம் (IFC) மற்றும் சர்வதேச தொழிலாளர் தாபனம் (ILO) ஆகியவை பால்நிலை சமத்துவம் மற்றும் நன்மைகள் (GEAR) திட்டத்தைத் தொடங்குவதற்கு சிறந்த வேலை முயற்சியின் கீழ் ஒன்றிணைந்தன.

பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை உயர்த்தும் நோக்கில், இந்த முன்னோடித் திட்டம் 10 ஆடைத் தொழிற்சாலைகளில் செயல்படுத்தப்பட்டு 106 நபர்கள் பயனடைந்தனர்.

GEAR திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததைக் குறிக்கும் வகையில், Vogue Tex" Orit Apparels மற்றும் Hela Clothing வழங்கும் நிகழ்ச்சியின் பங்கேற்பாளர்களை அங்கீகரிக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இலங்கையின் ஆடைத் தொழிலில் பெண்களை வலுவூட்டுவதற்கான ஒன்றிணைந்த சூழலை உருவாக்கி, படித்த மற்றும் புத்திசாலித்தனமான தலைமுறையை உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

ஒன்றிணைந்த கூட்டு ஆடைச் சங்கங்களின் மன்றம், இலங்கை முதலாளிமார் சம்மேளனம் மற்றும் முகாமைத்துவத்தில் பெண்கள் - Women in Management (இலங்கை மற்றும் மாலைதீவுகள்) ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

